பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 02 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் நக்சலைட் தீவிரவாதத்திற்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் மக்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி தந்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. இந்தியாவில் பயிலும் மலேசிய மாணவர்களுக்கு திருவள்ளுவர் கல்வி உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
3. ஜம்மு காஷ்மீரில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று ஆய்வு மேற்கொண்டார்.
4. அண்டை நாடுகளை காட்டிலும் இந்தியாவில் வர்த்தகத்துக்கான வரி குறைவாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
5. குவைத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் மத்திய அரசு நக்சலைட் தீவிரவாதத்திற்கு எதிராக மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக மக்களுக்கு பாதுகாப்பான சூழல் கிடைத்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில் பஸ்தார் பழங்குடியினர் விழாவை தொடங்கிவைத்து பேசிய அவர், இப்பகுதியில் வளமான பழங்குடியினர் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த விழா அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

கடந்த நான்காண்டுகளாக உள்நாட்டு தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த இந்த பகுதியில் தற்போது கொண்டாட்டங்கள் நிறைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

இளைஞர்கள், பழங்குடியின மக்கள் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் தீவிரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தற்போது எவ்வித அச்சமும் இன்றி, மகிழ்ச்சியாக பழங்குடியின விழாவை கொண்டாடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசின் நடவடிக்கைகளால் தீவிரவாதத்தின் பிடியில் இருந்த பலர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி, அனைத்து மக்களுடன் இணைந்து

அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சரணடையும் நக்சலைட்டுகள் மறுவாழ்வுக்கென பல திட்டங்களை மத்திய — மாநில அரசுகள் அறிவித்துள்ளதையும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

இந்தியாவில் பயிலும் மலேசிய மாணவர்களுக்கு திருவள்ளுவர் கல்வி உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக மலேசியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, கோலாலம்பூரில் இந்திய வம்சாவளியினர் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிமுடன் கலந்துகொண்டார்.

அப்போது பேசிய அவர், இந்தியாவின் UPI மின்னணு பணப்பரிவர்த்தனை கட்டமைப்பு விரைவில் மலேசியாவிலும் ஏற்படுத்தித் தரப்படும் என்றார்.

இந்தியாவிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மலேசியாவில் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் இந்த நிறுவனங்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான அடையாள அட்டை, மலேசியாவில் வசிக்கும் ஆறாவது தலைமுறை இந்திய வம்சாவளியினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவில் இந்திய தூதரகம் விரைவில் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவின் முன்னேற்றத்திற்கும், இந்தியாவின் வளர்ச்சிக்கும் இந்திய வம்சாவளியினர் முக்கிய பங்காற்றி வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று உயர்மட்ட ஆலோசனை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அவர், ஜம்மு காஷ்மீரில் முன்எப்போதும் இல்லாத வகையில் முதலீடு, தொழில்வளர்ச்சி, விளையாட்டுத்துறை மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் முடுக்கி விடப்படும் என்று தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் வளர்ச்சி குறித்தும் திரு அமித் ஷா ஆய்வு செய்தார்.

ஒவ்வொரு வளர்ச்சித் திட்டத்தையும் தனித்தனியாக ஆய்வு மேற்கொண்ட அவர், குறித்த காலத்தில் இவை அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>

அண்டை நாடுகளை காட்டிலும் இந்தியாவில் வர்த்தகத்துக்கான வரி குறைவாக உள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்திய — அமெரிக்க கூட்டறிக்கை குறித்து இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு பியூஷ் கோயல், இந்திய — அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய ஏற்றுமதிக்கான வரி **50** சதவீதத்தில் இருந்து **18** சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை **45** லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தின்மூலம், முதலீட்டாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் நியாயமாகவும், சமச்சீராகவும் உள்ளது என்று குறிப்பிட்ட திரு கோயல், இந்தியாவில் அதிக அளவில் உற்பத்தியாகும் பால் மற்றும் பால் பொருட்கள், வேளாண் பொருட்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய எவ்வித சலுகையும் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

உள்நாட்டு விவசாயிகள் நலனை பாதுகாக்கும் வகையில், மக்காச்சோளம், கோதுமை, அரிசி, சர்க்கரை, சோயாபீன்ஸ் மற்றும் கோழிப்பண்ணை உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரிகள் தொடரும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் **17** எயிம்ஸ் மருத்துவ கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் **Faridabad-**ல் கல்வி நிறுவனம் ஒன்றின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், பிஜேபி தலைமையிலான அரசு அமைவதற்குமுன் நாட்டில் ஆறு எயிம்ஸ் மருத்துவ கல்வி

நிறுவனங்கள் மட்டுமே செயல்பட்டு வந்ததாகவும் தற்போது இது **23-**ஆக உயர்ந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

உலகத்தரத்துக்கு இணையான மருத்துவக் கல்வி நிறுவனங்கள் நாடு முழுவதும் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மகப்பேறு, குழந்தை நலன், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான தடுப்பு மருத்துவம் நாடு முழுவதும் விரிவடைந்திருப்பதாக அவர் கூறினார்.

காசநோய் முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்காக உலக சுகாதார நிறுவனம் இந்தியாவுக்கு பாராட்டு தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பட்டம் பெறும் மாணவ, மாணவியர் நாட்டின் உயர்ந்த மாண்புகளை கடைபிடிக்க வேண்டும் என்றும், பொது சேவைக்கு தங்களை அர்ப்பணித்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**2047-**ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு இளைஞர்கள் தங்களது முழு பங்களிப்பையும் செலுத்த வேண்டும் என்றும் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கான கட்டமைப்பை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உருவாக்கி வெற்றிகண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டிற்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றி இது என்றும் கூறியுள்ளார்.

18 சதவீதம் அளவுக்கு வர்த்தகத்துக்கான வரிகள் குறைக்கப்பட்டுள்ளது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனை பாதுகாக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு 30 ட்ரில்லியன் டாலர் சந்தையை இந்த ஒப்பந்தம் விரிவுபடுத்தி தந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இதனால் அதிக அளவில் லாபம் அடைவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளர்.

நாட்டின் ஏற்றுமதி அதிகரிப்பதோடு, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு தேவையான வேலைவாய்ப்பையும்

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

சட்டீஸ்கரின் பிஜப்பூர், சுக்மா மாவட்டங்களில் இன்று 51 நக்சலைட்டுகள் சரணடைந்தனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் 30 பேர் சரணடைந்துள்ளனர்.

வன்முறை பாதையைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு அவர்கள் திரும்பியுள்ளதாக உறுதிமொழி அளித்தனர்.

சுக்மா மாவட்டத்தில் சரணடைந்த 21 நக்சலைட்டுகள் தங்களிடமிருந்த ஏகே-47 ரக துப்பாகிகள், எஸ் எல் ஆர் துப்பாகிகள் மற்றும் குண்டுகளை ஏவும் சிறிய வகை பீரங்கிகளையும் ஒப்படைத்தனர்.

சரணடைந்த அனைவருக்கும் மாநில அரசு சார்பில், மறுவாழ்வு ஊக்கத்தொகையாக தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>

மத்திய பணிகள் தேர்வாணையம் UPSC தகவல் மையங்கள் காலை ஏழு மணிமுதல், இரவு 9 மணிவரை இரண்டு பிரிவுகளாக செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிமைப்பணிகள் தேர்வு, இந்திய வனத்துறை பணிகள் தேர்வு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு முடியும் வரை சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக **UPSC** தலைவர் திரு அஜய்குமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், அதிக அளவில் தேர்வு எழுதுபவர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், காலதாமதம் இன்றி அவர்களுக்கான சேவைகள் கிடைப்பதற்கு ஏதுவாகவும் தகவல் மையங்களின் பணிநேரம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

குவைத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **7-6, 6-3** என்ற செட் கணக்கில், சுவிட்சர்லாந்தின் **Luca Staeheli** -ஐ வென்றார்.

---------------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்துவரும்

**இந்தியா சற்றுமுன்வரை 3.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 26 ரன் எடுத்துள்ளது.**

**மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற அமெரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.**

**<<<<<<END>>>>>**